

சின்னமனூர் பகுதியில் மறியலில் ஈடுபட்ட பொதுமக்களை படத்தில் காணலாம்.

### தேனியில் கேரளாகாரர்களுக்கு சொந்தமான

# ஓட்டல், கடைகள், நிதிநிறுவ சூறையாடப்பட்டன

## மாவட்டம் முழுவதும் கடையடைப்பு; பஸ்கள் ஓடவில்லை

தேனி,டிச.14– முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை எதிரொலியாக தேனியில் கேரளாகாரர்களுக்கு சொந்தமான ஓட்டல், கடைகள், நிதிநிறுவனங்கள் சூறையாடப்பட்டன. மாவட்டம் முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டன. தேனி நகரில் இருந்து எந்த பகுதிக்கும் பஸ்கள் இயக்கப்படவில்லை.

### கடையடைப்பு

முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக கடை அடைப்பு நடத்த தேனி மாவட்டம் அனைத்து வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து நேற்று

ஓடத்தொடங்கின. பள்ளிக்கூடங்களும் வழக்கம் போல் செயல்பட்டன. ஆட்டோக்கள், கார்கள் இயங்கின. பகல் 11 மணி அளவில் ஆதி தமிழர் பேரவை அமைப்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் தேனி நேரு சிலை அருகே வந்து திடீரென மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் அந்த பகுதியில் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவருக்கு சொந்தமான 3 நட்சத்திர ஓட்டல் ஒன்றின் ஜன்னல், கண்ணாடிகளை அடித்து நொறுக்கி சூறையாடினார்கள். பின்னர் பதற்றமான சூழலை அடுத்து தேனி பஸ் நிலையத்தில் இருந்து பஸ்கள் அனைத்தும் அரசு போக்குவரத்து கழக பணிமனைக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டன.

திற்கு மொத்தமாக சரக்குகளை ஏற்றி அனுப்பும் தொழில் அதிபர் ஒருவரின் கடை மீதும் போராட்டக்குழுவினர் தாக்குதல் நடத்தினார்கள்.

### உண்ணாவிரதம் நிறுத்தம்

மேலும் அந்த தொழில் அதிபரின் கடை முன்பு நிறுத்தி இருந்த அவருடைய கார் கண்ணாடியையும் அடித்து நொறுக்கினார்கள். இந்த பதற்றமான சூழலில் முல்லைப்பெரியாறு அணையை பாதுகாக்கும் பொருட்டு தேனி விளையாட்டு கழகம் மற்றும் தேனி மாவட்ட புளி வியாபாரிகள் சங்கம் சார்பில் மதுரை சாலையில் நடைபெற்ற உண்ணாவிரத போராட்டத்தை பாதியில் நிறுத்திக்கொள்ள போலீசார் அறிவுறுத்தினர்.

இதனை அடுத்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள்

மலையாளத்தில் எழுதப்பட்டிருந்த எழுத்துகளை அந்தந்த ஓட்டல் உரிமையாளர்களே வேலை ஆட்களை விட்டு வர்ணம்–பூசி அழித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### போடி

போடி நகரில் டீக்கடை முதல் அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டு இருந்தன. வர்த்தக சங்க தலைவர் ரவீந்திரன், செயலாளர் தனசேகரன், இணைச் செயலாளர்கள் வேல்முருகன், சண்முகம் ஆகியோர் நகர் முழுவதும் சுற்றி வந்து கடைகள் அடைக் கப்பட்டுள்ளதா என்று பார்வையிட்டனர்.

ஆட்டோக்கள், கார்கள் வழக்கம் போல் செயல்பட்டன. கம்பம் மெட்டு பகுதியில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கானவர்கள் மறியல் போராட்டம் நடத் தியதன் எதிரொலியாக நேற்று போடி மெட்டு மலைச் சாலையில் ஏராளமான போலீசார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டு இருந்தனர். கட்டுமான தொழிலாளர்கள் சங்க சார்பில்




**தேனியில் உள்ள கேரளாவை சேர்ந்தவரின் ஓட்டலை கல்வீசி தாக்கிய போது எடுத்த படம்.**

# ரங்கள்

போராட்டக்குழுவினரை
தடுத்தனர். அந்த தடையை
மீறி லோயர் கேம்ப் குருவ
னூத்து பாலம் அருகே பகல் 1
மணி அளவில் ஊர்வலமாக
பொது மக்கள் வந்து சேர்ந்த
னர்.

அங்கே பாலத்தை மறித்து
போலீஸ் வாகனங்கள் நிறுத்
தப்பட்டதுடன், தென் மண்
டல போலீஸ் ஐ.ஜி. ராஜேஷ்
தாஸ், போலீஸ் சூப்பிரண்டு
கள் பிரவீண்குமார் அபினபு,
ஈஸ்வரன் மற்றும் ஆயுதம்
தாங்கிய சிறப்பு அதிரடிப்
படை போலீசார் போராட்
டக்குழுவினரை தடுத்து நிறுத்
தினர். போராட்டக்குழுவின
ரிடம் தென் மண்டல போலீஸ்
ஐ.ஜி. ராஜேஷ்தாஸ் மேற்
கொண்டு இந்த பாதையில்
செல்ல முடியாது என அறி
வுரை வழங்கி பேசினார்.
சுமார் 45 நிமிடம் அவர்
பொது மக்களிடம் பேசியதை
தொடர்ந்து அங்கு நின்ற
பொது மக்கள் கேரள மாநில
அரசை கண்டித்து கோஷம்
எழுப்பினர். பின்னர் அவர்கள்
அங்கிருந்து கலைந்து சென்ற
னர்.

## பஸ் போக்குவரத்து நிறுத்தம்

போரட்டம் நடத்தியவர்கள்
தேனி மாவட்டம் முழுவதும்
பல்வேறு பகுதிகளில் சாலை
களில் தடுப்பை ஏற்படுத்தியும்,
மரங்களை போட்டும், குழாய்
களை போட்டும் வைத்து
இருந்தனர். இதன் காரணமாக
போக்குவரத்து பாதிக்கப்பட்
டது. ஆங்காங்கே நடந்த சிறு
சிறு அசம்பாவிதங்கள் கார
ணமாக தேனி நகரில் இருந்து
காலை 11 மணிக்கு மேல் பஸ்
கள் இயக்கப்படுவது நிறுத்தப்
பட்டது. தேனி நகரில் இருந்து
போடி, சின்னமனூர், கம்பம்,
உத்தமபாளையம், கூடலூர்,
மதுரை, திண்டுக்கல், பெரிய
குளம் உள்பட அனைத்து பகு
திகளுக்கும் பஸ் போக்குவ
ரத்து நிறுத்தப்பட்டது. நகரில்
இயக்கப்படும் மினி பஸ்
போக்குவரத்தும் நிறுத்தப்பட
டது. இதன் காரணமாக தே
பஸ் நிலையம் வெறிச் சோ
காணப்பட்டது. வெளியூர்
ளில் இருந்து வந்த பயணிக
வேறு இடங்களுக்கு செல்
முடியாமல் தவித்தன
பக்கத்து கிராமங்களை சேர்
தவர்கள் நடந்தே தங்கள் கிர
மங்களுக்கு சென்றனர்.

பள்ளிக்கூடங்களுக்கு பிற்
கலில் விடுமுறை அளிக்க
பட்டதால் அவர்களும் த
கள் கிராமங்களுக்கு நடந்
சென்றனர். தேனி நகரி
நேற்று முழு அடைப்பு போ
அமைதி நிலவியது. ஒரு சி
இடங்களில் மட்டும் ஆ
டோக்கள் இயக்கப் பட்ட
குறிப்பிடத்தக்கது.

தேனி, ஆண்டிப்பட்டி, போடி, பெரியகுளம், சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம், கூடலூர், தேவாரம் உள்பட மாவட்டம் முழுவதும் ஜவுளி, தங்க நகை கடைகள் அடைக்கப்பட்டன. சிறிய டீக்கடைகள் கூட நேற்று திறக்கப்படவில்லை. பெட்ரோல் நிலையங்களும் செயல்பட வில்லை.

### ஓட்டல் சூறையாடல்

தேனி நகரில் நேற்று காலையில் வழக்கம் போல் பஸ்கள்

இதனை அடுத்து பஸ்நிலைய பகுதிகளில் போலீசார் பாதுகாப்பு பணிக்காக குவிக்கப்பட்டனர். அதே நேரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தேனி நகரில் உள்ள கேரள நிதி நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். அந்த நிறுவனங்களின் பெயர் பலகைகளை அடித்து நொறுக்கினார்கள். இதைத் தொடர்ந்து பதற்றம் நிலவியது. மேலும் தேனி நகரில் இருந்து கேரள மாநிலத்

உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு பாதியில் அங்கிருந்து புறப்பட்டு சென்றனர். இந்த போராட்டம் காரணமாக தேனி நகர சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன.

இதன் எதிரொலியாக தேனி நகரில் உள்ள அனைத்து பள்ளிக் கூடங்களுக்கும் பிற்பகலில் விடுமுறை அளிக்கப்பட்டது. முன்னதாக தேனி நகரில் உள்ள பிரபல ஓட்டல்களில் உள்ள விளம்பர பலகைகளில்

சங்கிலி போராட்டம் நடத்தப்பட்டது. போடி அருகே உள்ள சில்லமரத்துப்பட்டியில் கிராமமக்கள் உண்ணாவிரத போராட்டம் நடத்தினார்கள்.

### சின்னமனூர்

சின்னமனூர் நகரில் நேற்று அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டு இருந்தன. நேற்று காலையில் ஆயிரக்கணக்கானவர்கள் ஊர்வலமாக வந்து போராட் டம் நடத்தினார்கள். அப்போது சிலர் கேரள நிறுவனங்களின் பெயர் பலகையை உடைத்து தீவைத்தனர். மேலும் பஸ் டயர்களை தீ வைத்து கொளுத்தி எரித்தனர். மேலும் அந்த சாலையில் ஆங்காங்கே மரக்கிளைகளை வெட்டி போட்டனர். இதனால் அந்த சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் போலீசார் அகற்றி விட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

### போலீஸ் ஐ.ஜி.

இதனிடையே இன்னொரு பகுதியில் குமுளி நோக்கி செல்ல முயன்ற பொது மக்கள் கூடலூரில் போலீசாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அப்போது போலீசாருக்கும், பொது மக்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலை அடுத்து போலீசார் லேசான தடியடி நடத்தினர். பின்னர் அங்கிருந்து லோயர் கேம்ப் நோக்கி போராட்டக்குழுவினர் புறப்பட்டு சென்றனர். தம்மணம்பட்டி விலக்கு பகுதியில் போலீசார் மீண்டும்




சின்னமனூரில் ரோட்டில் டயர்களை போட்டு தீவைத்து கொளுத்திய போது எடுத்த படம்.




லோயர்கேம் பகுதியில் முற்றுகையிட்ட பொதுமக்கள் மத்தியில் தென்மண்டல போலீஸ் ஐ.ஜி ராஜேஷ்தாஸ் பேசிய காட்சி.